# இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்

புள்ளிவிபரத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு மற்றும் பணிகள் என்பனவற்றின் பெறுபேறுகள்

## தயாரிப்பு நடவடிக்கைகள் முன்னேற்றமடைந்தது

தயாரிப்பு துறை கொ.மு.சுவின் அனைத்து துணைச்சுட்டெண்களும் செத்தெம்பருடன் ஒப்பிடுகையில் ஒத்தோபரில் நடுநிலையான 50.0இற்கு மேலான பெறுமதியை பதிவு செய்து ஒட்டுமொத்த விரிவாக்கத்தினை காண்பித்தது.

ஒத்தோபரில் தயாரிப்பு நடவடிக்கைகளில் அவதானிக்கப்பட்ட மேம்பாடானது பிரதானமாக புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்திகளிலான மேம்பாடொன்றினால் உந்தப்பட்டது. இதற்கு, விசேடமாக உணவு மற்றும் குடிபான தயாரிப்பு நடவடிக்கைகளில் பருவகால கேள்வி மீதான சாதகமான தோற்றப்பாடு செல்வாக்கு செலுத்தியிருந்தது. பருவகால போக்குடன் உணவு மற்றும் குடிபான தயாரிப்பு நடவடிக்கைகளில் தொழில்நிலையானது அதிகரித்திருந்த போதிலும், ஒட்டுமொத்த தொழில்நிலையானது மெதுவடைந்திருந்தது. இதற்கு, புடவைகள், அணியும் ஆடைகள், தோல் மற்றும் அதனுடன் சார்ந்த தயாரிப்பு நடவடிக்கைகளுக்கு சந்தையிலிருந்து தொழிலாளர்களை தேர்வு செய்வதில் உள்ள சிக்கல்கள் பிரதானமாக சான்று கூறின.


| மாறி | செத். | ஒத்தோபர் | +/- | சாராம்சம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **54.1** | **58.2** | **+** | அதிகரிப்பு, உயர்வான வீதத்தில் |
| **கொ.மு.சு துணைச்சுட்டெண்கள்** | | | | |
| புதிய கட்டளைகள் | 53.0 | 59.0 | + | அதிகரிப்பு, உயர்வான வீதத்தில் |
| உற்பத்தி | 53.5 | 61.0 | + | அதிகரிப்பு, உயர்வான வீதத்தில் |
| தொழில்நிலை | 55.5 | 55.0 | - | அதிகரிப்பு, மெதுவான வீதத்தில் |
| கொள்வனவுகளின் இருப்பு | 56.0 | 61.0 | + | அதிகரிப்பு, உயர்வான வீதத்தில் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | 54.0 | 54.0 | = | நீட்சி, சமமான வீதத்தில் |

இதேவேளையில், வரவிருக்கின்ற பருவகாலத்திற்கான முன்னேற்பாடுகளுக்காக தளபாட தயாரிப்பு நடவடிக்கைகளில் தேக்கப்பட்ட இருப்புகளின் காரணமாக கொள்வனவுகளின் இருப்புகளில் மேம்பாடொன்றினை குறித்துக்காட்டியது. அதேவேளை, நீட்சியடைந்த நிரம்பலர் வழங்கல் நேரமானது வழக்கமாக பொருளாதாரத்தின் குறுகிய காலத்தில் நடவடிக்கைகளின் விரிவாக்கத்தின் துரித வளர்ச்சியை குறித்துக்காட்டுகின்றது. எவ்வாறாயினும், இச்சந்தர்ப்பத்தில், நீட்சியடைந்த நிரம்பலர் நேரமானது, முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் சமமான வீதத்தினால் நீட்சியடைந்திருந்ததுடன், இதற்கு உள்ளீட்டு பொருட்களிலான தட்டுப்பாடு மற்றும் எதிர்பார்க்கப்படுகின்ற உள்நாட்டு ரூபாவின் உறுதிப்பாட்டுடன் உள்ளீட்டு பொருட்களின் விலையில் மேலதிக அதிகரிப்பினை கட்டுப்படுத்துவதற்கு மூலப்பொருள் கிடைப்பனவு நேரத்தினை வேண்டுமென்றே அதிகரிப்பதனூடாக பிரதானமாக உந்தப்பட்டது.

**கொ.மு.சு**
சுட்டெண் பெறுமதி
**58.2**

செத்தெம்பர் 2018 உடன் ஒப்பிடுகையில் 4.1 சுட்டெண் புள்ளிகள் அதிகரிப்பு

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் தயாரிப்பு




***உலக தோற்றப்பாடு: தயாரிப்பு கொ.மு.சு***

உலக தயாரிப்பு கொ.மு.சு செத்தெம்பர் 2018 உடன் ஒப்பிடுகையில் 0.1 சுட்டெண் புள்ளிகள் குறைவடைந்து ஒத்தோபரில் 52.1 சுட்டெண் புள்ளிகளை பதிவு செய்ததுடன், இது உலக தயாரிப்பு வளர்ச்சியானது ஒத்தோபரில் மெதுவடைந்தமையினை காண்பித்தது.

ஐரோப்பிய வலயம் மற்றும் ஐக்கிய இராச்சியம் என்பவற்றின் தயாரிப்பு கொ.மு.சு ஒத்தோபர் 2018இல் மெதுவடைந்திருந்துடன் சீனா, இந்தியா, ரஷ்யா மற்றும் ஐக்கிய அமெரிக்கா என்பன அதிகரித்திருந்தது.

*(மூலம்: மார்க்கிட், நவம்பர் 13, 2018 இல் உள்ளபடியான)*

*1 மார்க்கிட் நிறுவனமானது நிதியியல் தரவுப் பணிகள் தொடர்பான முன்னிலையான உலக பன்முகத்தன்மை வாய்ந்த வழங்குனராகும். இது உலக கொ.மு.சு தொகுப்பாளராக அடையாளங்காணப்படுவதுடன் ஐரோப்பிய வலயம் போன்ற முக்கிய பிரதேசங்கள் உள்ளடங்கலாக 30க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு கொ.மு.சு இனை தொகுக்கின்றது.*


## பணிகள் துறை வளர்ச்சியானது ஒத்தோபரில் வேகமாக அதிகரித்தது

பணிகள் துறையானது ஒத்தோபரில் ஒரு உயர்வான வீதத்தில் அதிகரித்திருந்ததுடன், வியாபார நடவடிக்கைகள், நடவடிக்கைகளுக்கான எதிர்பார்ப்புகள் மற்றும் புதிய வியாபாரங்கள் என்பவற்றின் உறுதியான மேல்நோக்கிய திருப்பமானது பெருமளவில் உதவி புரிந்தது.

வியாபார நடவடிக்கைளில் விரிவாக்கமானது பிரதானமாக நிதியியல் பணிகள் மற்றும் போக்குவரத்து மற்றும் களஞ்சியப்படுத்தல் துணைத்துறைகளில் காணப்பட்டது. எவ்வாறாயினும், தேய்வடைந்த உள்நாட்டு நாணயமானது இறக்குமதி அளவுகளில் பாதகமான விளைவினை தோற்றுவித்ததுடன் அவர்களுடைய வளர்ச்சி நடவடிக்கைகளிலும் செல்வாக்கு செலுத்தியதாக பதிலிறுப்பாளர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர். புதிய நடவடிக்கைகளும் நிதியியல் பணிகள் மற்றும் தொழில்சார் நிபுணத்துவ பணிகள் துணைத்துறைகளில் விரிவாக்கமடைந்திருந்தது. தொழில்நிலை மட்டமானது வியாபார நடவடிக்கைகளின் விரிவாக்கம் காரணமாக ஒத்தோபரில் ஒரு உயர்வான வீதத்தில் அதிகரித்திருந்தது.

**கொ.மு.சு**
**சுட்டெண் பெறுமதி**
**55.5**

**செத்தெம்பர் 2018 உடன் ஒப்பிடுகையில் 2.5 சுட்டெண் புள்ளிகள் அதிகரிப்பு**




| மாறி | செத். | ஒத்தோபர் | +/- | சாராம்சம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **53.0** | **55.5** | **+** | அதிகரிப்பு, உயர்வான வீதத்தில் |
| கொ.மு.சு துணைச்சுட்டெண்கள் | | | | |
| புதிய வியாபாரங்கள் | 55.2 | 58.2 | + | அதிகரிப்பு, உயர்வான வீதத்தில் |
| வியாபார நடவடிக்கைகள் | 51.0 | 57.1 | + | அதிகரிப்பு, உயர்வான வீதத்தில் |
| தொழில்நிலை | 54.2 | 55.4 | + | அதிகரிப்பு, உயர்வான வீதத்தில் |
| நிலுவையிலுள்ள பணிகள் | 45.0 | 43.1 | - | வீழ்ச்சி, உயர்வான வீதத்தில் |
| நடவடிக்கைகளுக்கான எதிர்பார்ப்பு | 59.6 | 63.6 | + | சாதகம், உயர்வான வீதத்தில் |

ஒத்தோபர் 2018இல் பணிகள் வழங்குனர்களின் அடுத்த மூன்று மாதங்களுக்கான வியாபார தோற்றப்பாடு மீதான நம்பிக்கையானது வரவிருக்கின்ற பண்டிகை பருவகாலம் மற்றும் சுற்றுலாத்துறையின் உச்ச பருவகாலம் என்பவற்றின் காரணமாக உறுதியடைந்திருந்தது. எவ்வாறாயினும், தற்போதுள்ள அரசியல் நிலைமைகள் மற்றும் உள்நாட்டு நாணயத்தின் நலிவடைவு காரணமாக எதிர்பார்க்கப்படுகின்ற அடைவுகளானது மெதுவடையக்கூடுமென பதிலிறுப்பாளர்கள் கரிசனை தெரிவித்திருந்தனர்.

பணிகள் துறையில் விதிக்கப்பட்ட விலையானது ஒரு உயர்வான வீதத்தில் அதிகரித்திருந்த வேளையில், பணிகள் துறையில் எதிர்பார்க்கப்பட்ட தொழிலாளர் செலவுகள் ஒத்தோபரில் சிறப்புக் கொடுப்பனவுகளின் காரணமாக அதிகரித்திருந்தது.

***உலக தோற்றப்பாடு: பணிகள் கொ.மு.சு***

உலக பணிகள் வியாபார நடவடிக்கையின் விரிவடையும் வீதமானது நான்கு மாதங்களில் முதன்முறையாக ஒத்தோபரில் வேகமாக அதிகரித்திருந்தமையினை காண்பித்தது. உலக பணிகள் கொ.மு.சு இரண்டு ஆண்டுகளில் குறைவான செத்தெம்பரில் பதிவு செய்யப்பட்ட 52.9 இலிருந்து ஒத்தோபரில் 53.4 இற்கு அதிகரித்ததுடன் 111 தொடர்ச்சியான மாதங்களுக்கான வளர்ச்சியினையும் தற்போது காண்பித்தது. அளவீட்டில் காணப்படுகின்ற நாடுகளில் இத்தாலி நாடு மாத்திரமே ஒத்தோபர் காலப்பகுதியில் வியாபார நடவடிக்கைகளில் ஒரு வீழ்ச்சியினை பதிவு செய்தது. அயர்லாந்து மற்றும் ரஷ்யா நாடுகளில் உயர்வான வீதத்தில் அதிகரித்திருந்தது.

ஜப்பான், சீனா, இந்தியா, ஐக்கிய இராச்சியம் மற்றும் ஐக்கிய அமெரிக்கா என்பனவற்றின் பணிகள் கொ.மு.சு செத்தெம்பர் 2018 உடன் ஒப்பிடுகையில் ஒத்தோபர் 2018இல் அவர்களுடைய பணிகள் துறையானது மேம்பாடு அடைந்தமையினை சுட்டிக்காட்டுகின்றது.

*(மூலம்: மார்க்கிட், நவம்பர் 13, 2018 இல் உள்ளபடியான)*

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது "வியாபித்தல் சுட்டெண்ணாக" கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

கொ.மு.சு = 50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது.

கொ.மு.சு > 50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது.

கொ.மு.சு < 50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது.

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | |
|---|---|
| தொழில்நிலை | : நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : வியாபார நடவடிக்கையின் அதிகரித்த பாய்ச்சலின் காரணமாக பூர்த்தி செய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.